# மற்றொரு வெளிநாட்டு இராணுவம் நாட்டுக்குள் பிரவேசிக்காதவாறு நாம் செயற்படவேண்டும்

(கொழும்பு)
மற்றுமொரு வெளிநாட்டு இராணுவம் மீண்டும் எமது நாட்டுக்குள் பிரவேசிக்காதவாறு நாம் செயற்படவேண்டும். வெளிநாட்டு இராணுவ வருகையால் ஒரு நாட்டில் என்ன நிகழும் என்பதை நாம் உணர்ந்ததனாலேயே இந்திய இராணுவத்தின் வருகையை எதிர்த்தோம்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா கொழும்பு (8-ம் பக்கம் பார்க்க)

ஆவணவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 பங்குனி: 25 றம்ழான் பிறை: 10 இதழ்: 54
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 07-04 1990

## காங்கேசன்துறையில் ஷெல் வெடித்து இருவர் பலி!

(யாழ்ப்பாணம்)
ஷெல் வெடித்து சிறுவன் ஒருவன் உட்பட இருவர் ஸ்தலத்திலே பலியானார்கள். மற்றுமொரு சிறுவன் படுகாயமடைந்தான். காங்கேசன்துறையில் நேற்று இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறை ஐயனார் கோவிலடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச்சேர்ந்த கார்த்திகேசு விஜயகுமார் என்ற எட்டு வய (8ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக்கு நேற்று முன்தினம் பிரபாகரன் திடீர் விஜயம்

# நினைவுத்தூபிகளுக்கு அஞ்சலி

### பெருந்திரளான மக்கள் வரவேற்பு

(வடமராட்சி)
தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் வடமராட்சிப் பகுதிக்கு நேற்று முன்தினம் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இவ்விஜயத்தின்போது அவர் தீருவிலில் அமைக்கப்பட்டுள்ள போராளிகளின் நினைவுத்தூபிக்கும் சென்று அஞ்சலி செலுத்தினர்.

வியாழக்கிழமை நண்பகல் இரண்டு மணியளவில் திரு. பிரபாகரன் முக்கிய பல தலைவர்களுடன் பருத்தித்துறைக்கு விஜயம் செய்தார். அப்போது அவர் புலிகளின் முக்கியமுகாம்களுக்குச் சென்று ஆலோசனையும் மேற்கொண்டார்.

இரவு சுமார் 7-30 மணியளவில் வல்வை தீருவிலில் அமைந்துள்ள தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் மற்றும் பன்னிரு போராளிகளின் நினைவுத் தூபிக்கும் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இதன்பின் திரு. பிரபாகரன் பொலிகண்டியில் (8-ம் பக்கம் பார்க்க)



### யாழ். இலங்கை வங்கியின் சர்வதேச பிரிவு இன்றும், நாளையும் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)
யாழ். இலங்கைவங்கியின் ஆஸ்பத்திரி வீதிக்கிளையிலுள்ள சர்வதேசப் பிரிவு இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 2-30 மணிவரை திறந்திருக்கும்.

புதுவருடத்தை முன்னிட்டு வெளிநாட்டு உண்டியல்களை மாற்றி எடுப்பதற்கு வசதியாகவும், வதியாதோர் வெளிநாட்டுக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்வதற்கும் மீளப் பெறுவதற்கும் வசதியாகவே மேற்படி கிளை சம்பந்தப்பட்ட இருநாட்களிலும் திறக்கப்படவிருப்பதாக வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### கரவெட்டி மீளக்குடியமர்தல் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)
கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள கிழ்காணும் கிராம சேவகர் பிரிவில் வசிப்பவர்களுக்கு, மக்கள் வங்கியின் நெல்லியடிக் கிளையின் ஊடாக (8-ம் பக்கம் பார்க்க)

### இலங்கை வர்த்தக வங்கியின் புத்தாண்டு சலுகைகள்

(யாழ்ப்பாணம்)
இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை தேசிய பாரம்பரியத்தை பேணும் வகையில் புத்தாண்டு தினத்தன்று 14ந் திகதி காலை 8மணிதொடக்கம் 9 மணிவரை பல புத்தாண்டுச் சலுகைகளை வழங்கவிருப்பதாக முகாமையாளர் திரு. செல்வரெத்தினம் இராகவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில், 500 ரூபாவுக்கு (8-ம் பக்கம் பார்க்க)

### ஓய்வூதிய வவுச்சர்களை இன்று வங்கிக்கணக்கில் வரவு வைக்கலாம்

(யாழ்ப்பாணம்)
யாழ். இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளை இன்று சனிக்கிழமை காலைஎட்டுமணி முதல் பிற்பகல் ஒரு மணி (8ம் பக்கம் பார்க்க)

### மக்கள் வங்கியில் கைவிசேஷம்

(யாழ்ப்பாணம்)
வடபிராந்தியத்திலுள்ள 16 மக்கள் வங்கிக் கிளைகளிலும் எதிர்வரும் 14-ம் திகதி புத்தாண்டு தினத்தன்று கைவிசேட நிகழ்ச்சி இடம் பெறும். (8-ம் பக்கம் பார்க்க)

## "புனர்நிர்மாண உதவிகள் சீராகபயன்படுத்தப்படுகிறது'

### அவுஸ்திரேலிய உயர் அதிகாரி கருத்து

(யாழ்ப்பாணம்)
''புனர் நிர்மாணத் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதி திருப்திகரமாகவும் உண்மையாகவும் இங்கு பயன்படுத்தப்பட்டு வருவது கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்'' என்று இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய தூதரக இலங்கை, மாலைதீவு நாடுகளின் புனர்நிர்மாண உதவி வழங்கும் அதிகாரி திரு. கோடன் கேபர்ட் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு விட்டு நேற்று கொழும்பு திரும்புகையில், பலாலி விமான நிலையத்தில் மேற்படி கருத்தை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திரு. கோடன் கேபர்ட்டுடன், உலக தரிசன'த்தின் கொழும்பு புனர் நிர்மாணத் திட்ட அதிகாரி திரு. நோயல் பேர்மன் ஜெய்ப்பூர் செயற் (8ம் பக்கம் பார்க்க)

## மூடப்படும் நிலையில் மந்திகை ஆஸ்பத்திரி

(வடமராட்சி)
மந்திகை ஆஸ்பத்திரியில் நிலவும் சீர்கேடுகளைத் திருத்த பத்திரிகையாளர்களின் உதவியை பிரான்ஸ் டாக்டர் செல்வி ஜாக்குலின் நாடியுள்ளார்.

நாளுக்கு நாள் புலோலி மந்திகை அரசினர் வைத்திய சாலை மோசமடைந்து வரு (8ம் பக்கம் பார்க்க)

## குரும்பசிட்டியில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு தாராள உதவி: ஆஸி. உயர் அதிகாரி உறுதி

(யாழ்ப்பாணம்)
குரும்பசிட்டிப் பகுதிக்கு விஜயம் செய்த அவுஸ்திரேலிய தூதரக உயர் அதிகாரி திரு. கோடன் கேபர்ட் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பின் போது இடம்பெயர்ந்து அகதிகளாக குரும்பசிட்டிப் பகுதியில்தஞ்சமடைந்திருக்கும் மக்களை நேரில் சந்தித்தார். (8ம் பக்கம் பார்க்க

### இன்றைய கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]
விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கருத்தரங்குகள் இன்று நடைபெறும்.

காலை ஏழு மணிக்கு யாழ் மாநகர தெ. ப. பொ. கூட் (8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயவிதை நாசிக் சிகப்பு ரகம். வியாபாரிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும். கிலோ 375-00 படி கிடைக்கும். பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3720)

அச்சகப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் ஸ்ரிச்ஷிங் மெஷின் (Stitching Machine) ஹாட்பிறஸ் (Hard Press) ஆகியன விற்பனைக்குண்டு தொடர்பு:- சைவப்பிரகாச அச்சுயந்திரசாலை, 450, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3718)

### தேவை

நாற்றுமேடைக்குப் பழுத்த நெல்லிக்காய் தேவைப்படுகின்றது. அன்பளிப்பாகத் தந்துதவக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

(ஏ-675)

### புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 09-04-90 திங்கள் முற்பகல் 8-30-மு. ப. 11-00 நேரங்களில் நடைபெறவுள்ளது. பதிவு செய்யவும். புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாவிடைவிற்பனைக்கு உண்டு. விலை ரூபா 25-00 புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

எ-3716

## நாளை ஆண்டுவிழா

(உடுவில்)

யாழ்ப்பாணம் பாரதி கான சபாவின் முதலாவது ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வயலின் வித்துவான் பிரம்மஸ்ரீ எஸ் சர்வேஸ்வர சர்மாவின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்டுவிழாவில் சங்கீத மும்மூர்த்திகள் ஆராதனையும், இணுவில் சாஸ்தாகுருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்களின் ஆசியுரையும் இடம்பெறும்.

வளரும் கலைஞர்கள், வித்துவான்கள் கலந்துகொள்ளும் கீர்த்தனாஞ்சலி சிறப்பம்சமாக நடைபெறும். (109)

## வீடமைப்புக் கடன் விண்ணப்பப் படிவங்கள் விநியோகம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குறைந்த வருமானமுடைய நகரவாசிகளுக்கு நகர வீடமைப்பு உபவேலைத்திட்டத்தின் கீழ் வீடமைப்புக்கடன் பெறுவதற்கான விண்ணப் படிவங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்படுகின்றது.

இதற்கான விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 25-ம் திகதி வரை விநியோகிக்க ஏற்பாடாகியுள்ளது.

மற்றும் வல்வெட்டித்துறை பருத்தித்துறை, சாவகச்சேரி நகரசபைகள் மூலம் அந்தந்த பிரிவுக்கான விண்ணப்பங்களும் விநியோகம் நடைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீடுகளை புதிதாக அமைக்க அல்லது திருத்தும் அல்லது குறைவேலை வீடுகள் பூர்த்தி செய்யவேண்டுமானால் 15 லட்சம் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் கடன் பெறுநர் பட்டியலில் பதிவு செய்ய வேண்டும்.

உண்மையாக வீடுகள் தேவைப்படுவோரும், குறிப்பிட்ட இடங்களில் வசிப்பவரும், 18 தொடக்கம் 50 வயதுவரை உள்ள ஒருவர் இக்கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறலாம்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபை, வீடமைப்பு திணைக்களம், புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் போன்றவற்றில் ஏற்கனவே கடன் பெற்றவர்கள் இத்திட்டத்

[7ம் பக்கம் பார்க்க)


## Tender for Furniture

Reference to the above advertisement on 30-03-90 the closing date of the Tender is extended upto 24-04-90 Last date for collection of Tender Form is extended upto 11-04-90.

Tenders will be opened at 2-30 p.m. on 24-04-90 in the Board Room of the University of Jaffna.

Registrar.
University of Jaffna,

(A-688)


## பிஸ்கட்டுகளில் இப்படி மோசடி: பண்டத்தரிப்பில் திடீர்ச் சோதனை!

(பண்டத்தரிப்பு)

உணவுப் பொருள்களுக்குப் பயன்படுத்துவதற்குத் தடை செய்யப்பட்டதும், மக்களின் உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் தன்மை வாய்ந்ததுமான இரசாயன நிறங்களை (கலர்களை) பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டது என்று உறுதிசெய்யப்பட்ட பெருமளவு பிஸ்கட்டுகள், பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள தனியார் பேக்கரி ஒன்றில் கைப்பற்றப்பட்டு, சுகாதார அதிகாரிகளினால் புதைக்கப்பட்டது.

யாழ். உணவு, மருந்துப் பரிசோதகர் திரு.ரி.மகாதேவன் தலைமையில் அண்மையில் இப்பகுதியிலுள்ள உணவுச்சாலைகள், பேக்கரிகள் ஆகியவற்றில் நேரடியாகச் சென்று, பரிசோதனை நடத்திய சுகாதாரக் குழுவினர், பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள மேற்படி பேக்கரியிலும் சோதனையிட்ட போது, அங்கு தயாரிக்கப்பட்டிருந்த பிஸ்கட்டுகளில் சந்தேகம்கொண்ட குழுவினர் அவற்றில் சிலவற்றை எடுத்துச் சென்று கொழும்பிலுள்ள அரசாங்க இரசாயன ஆய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவை பரிசோதிக்கப்பட்டுக் கிடைத்த அறிக்கையில், மேற்படி பிஸ்கட்டுகளில் உணவுப் பொருட்களுக்குத் தடைசெய்யப்பட்ட, உடல் நலத்திற்கு ஆபத்தான நிறங்கள் (கலர்கள்) பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையுடன் கடந்த வாரம் மேற்படி பேக்கரிக்கு விரைந்த சுகாதார அதிகாரிகள், அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பிஸ்கட்டுகளை கைப்பற்றி, நிலத்தில் கிடங்கு வெட்டிப் புதைத்தனர். (72)

## கோமாரி நோய்க்கு தடை மருந்துகள்

(அச்சுவேலி)

கால்நடைகளுக்கு மீண்டும் கோமாரி நோய் பரவத் தொடங்கியுள்ளதையடுத்து கோமாரி நோய்த் தடை மருந்து ஏற்றப்பட்டுவருகின்றது.

கால்நடை வைத்திய அதிகாரிகள் கிராமம் கிராமமாக சென்று கோமாரி நோய்த் தடைமருந்துகளை கால்நடைகளுக்கு ஏற்றிவருகின்றனர்.


## யாழ்ப்பாணம் - கச்சேரி

(புனர்வாழ்வு, புனரமைப்புப் பிரிவு)

சேதமாக்கப்பட்ட கட்டிடங்கள் விற்பனைக்கான

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சேதமுற்ற யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அலுவலக இருமாடிக் கட்டிடம் (நிலம் தவிர்ந்த கட்டிடம் சம்பந்தமான சகல பொருட்களும்) விற்பனைக்கான கேள்விப்பத்திரப் படிவங்கள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரால் 1990ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும்.

இக்கட்டிடத்தைப் பார்வையிட விரும்புகிறவர்கள் யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதித் திட்டப்பணிப்பாளர் (தொழிநுட்பம்) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அன்ரன் அல்பிரட்,
யாழ்ப்பாணம் - அரசாங்க அதிபர்.

செயலகம், யாழ்ப்பாணம்.
1990-04-04.

(எ-674)



## மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப்பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகள் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர் மாடிக்கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|
| 1. யாழ் / ஸ்ரான்லி வீதிக்கிளை (15-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | | |
| 31-3-83 வரை அடகு வைத்தவர்கள் | 06-04-90 | வெள்ளி |
| 31-3-83ன் பின்பு அடகு வைத்தவர்கள் | 07-04-90 | சனி |
| 2. யாழ் / பிரதானவீதிக் கிளை, புங்குடுதீவுக் கிளை (12-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07-04-90 | சனி |
| 3. யாழ் / கன்னாதிட்டிக் கிளை, சங்கானைக் கிளை (12-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07-04-90 | சனி |
| 4. யாழ் / நவீன சந்தைக் கிளை (12-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06-04-90 | வெள்ளி |
| 5. சாவகச்சேரிக் கிளை, பளைக் கிளை (15-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06-04-90 | வெள்ளி |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 1-00 மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந்தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

[எ-670]



## JAFFNA ENGLISH ACADEMY

## ENGLISH SHORT STORY / POETRY COMPETITIONS

Open to only Sri Lankans under 30 years.

Contributions should be neatly and clearly typed, double - space, on one side of the paper only.

Poems should not exceed one foolscap sheet, and short stories three.

All entries should reach us on or before 30 - 04 - 1990.

Send your contributions with your full name, address and the date of your birth to the

DIRECTOR OF STUDIES,
JAFFNA ENGLISH ACADEMY,
NO. 9, IRAKKA LANE,
CHUNDIKULI,
JAFFNA.

Even if the Author opts to use his / her initials or pseudonym, his / her name should be given.

All works submitted should be original and unpublished, and are accepted on the basis that they will not be published in any journal or newspaper.

1-st prize — Rs. 1000/-
2-nd prize — Rs. 500/-
3-rd prize — Rs. 250/-

There will be six prizes altogether. Three for short stories and 3 for Poetry.

No correspondence regarding competitions will be entertained.

(A-663)

# அமெ. - சோவியத் தலைவர்கள் ஜூனில் சந்திக்கிறார்கள்!

(மாஸ்கோ)

**அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கும் சோவியத் தலைவர் மிகைல் கொர்பசேவுக்கும் இடையிலான மாநாடு ஒன்று ஜூன் மாதம் நடைபெறவுள்ளது.**

கேந்திர முக்கியத்துவமிக்க அணு ஆயுதங்களிலும் இரசாயன படைக்கலங்களிலும் குறைப்பு செய்தல் உட்பட பல விடயங்கள் குறித்து இம் மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இரு தலைவர்களுக்குமிடையிலான இந்த மாநாடு தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சருடன் சோவியத் வெளியுறவு அமைச்சர் திரு. எட்வேட் செவர்ணட்சே இம் மாநாடு குறித்து இப்போது பூர்வாங்க பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்.

லிதுவேனிய விவகாரம் இந்தப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது

லிதுவேனியகுடியரசின் சுதந்திர பிரகடனத்திற்கு ஆதரவு தெரிவித்து அமெரிக்க ஜனாதிபதி சோவியத் தலைவருக்கு அண்மையில் கடிதம் எழுதியது குறிப்பிடத்தக்கது. (து)

## காஷ்மீர் விடுதலை முன்னணி 38 பிராந்திய தளபதிகளை புதிதாக நியமித்துள்ளது!

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பள்ளத்தாக்கின் ஆறு வட்டாரங்களுக்கு 38-புதிய பிராந்திய தளபதிகளை நியமித்துள்ளதாக ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இந்த விடுதலை இயக்கத்தினருக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையில் கடந்த வாரம் இடம்பெற்ற மோதலொன்றில் இயக்கத்தின் உயர் தளபதி ஒருவர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (து)

## பஞ்சாப் நிலைமை

(புதுடில்லி)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் இடம்பெற்றுவரும் மத்திய அரசு ஆட்சியை மேலும் ஆறுமாத காலத்திற்கு நீடிக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றம் மத்திய அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது. பஞ்சாப்பில் குண்டுவெடிப்பு ஒன்றின்போது முப்பது இந்துக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது.

## புதுவருட தினத்தில் வங்கிச்சேவை

(வட்டுக்கோட்டை)

கன்ணுதிட்டி மக்கள் வங்கிக் கிளை, புதுவருடத்தை முன்னிட்டு 14ம் திகதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பணத்தை வைப்பீடு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. புதுவருட தினத்தன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வைப்பீடு செய்யும் முதலீட்டை ஏற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கன்ணுதிட்டி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் திரு. எம். தியாகராசா தெரிவித்தார். (139)

## மீளக்குடியமர்தல் நிவாரணம்

(மானிப்பாய்)

காங்கேசன்துறை இலங்கை வங்கி கிளையில் மீளக்குடியமர்தலுக்கான 2-ம் கட்ட நிவாரணப்பணம் பெறத்தவறியவர்களுக்கு இம் மாதம் 9-ம் திகதி வழங்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு கடந்த மாதம் 26-ம் திகதி முதல் மேற்படி இலங்கை வங்கிக் கிளையில் யாழ். செயலக ஊழியர்களினால் மீளக் குடியமர்தலுக்கான பணம் ரூபா 1000 வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் இப்பணத்தை இதுவரை பெறத் தவறியவர்கள் எதிர்வரும் 9-ம் திகதி இவ் வங்கியிலுள்ள யாழ். செயலக கரும பீடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான நிவாரணப்

(5-ம் பக்கம் பார்க்க)

## குறட்டை விடுவதனால் நன்மையா? தீமையா

(லண்டன்)

மனிதர்கள்விடும் குறட்டையினால் தீமை ஏற்படுமா? அல்லது நன்மை விளைவிக்குமா? என்ற சர்ச்சை இப்போது எழுந்துள்ளது.

பிரிட்டனில் ஒரு பெண்மணி விடும் குறட்டை காரணமாக பக்கத்து வீட்டில் குடியிருக்கும் இளம் தம்பதிகள் உறங்க முடியவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

பக்கத்து வீட்டு மூதாட்டியின் குறட்டை ஒலியினால் தமது கணவரின் இதயம் பாதிக்கப்படுவதாக திருமதி சான்ரு டேவிட் என்னும் பெண்மணி புகார்செய்தார்.

திருமதி சிமித் என்னும் குறட்டை விடும் மூதாட்டி தான்விடும் குறட்டை உடலுக்கும், இதயத்திற்கும், இரத்த அழுத்தத்திற்கும் மிகவும் நல்லது என்று வாதிட்டார்.

எப்படியோ இரு தரப்பினருக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டு இரு வீடுகளுக்குமிடையில் ஒலி தடுப்புச் சுவர் ஒன்று எழுப்பப்பட்டு இந்த பிரச்சனைக்குத் தீர்வுகாணப்பட்டது.

இந்த ஒலி தடுப்புச் சுவருக்கான செலவினை இரு தரப்பினரும் பங்கிட்டுச் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## எம். பி.க்கள் மீது புதிய வலை வீச்சு: பொலிஸாருக்கு ஜனாதிபதி உத்தரவு!

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சலுகை அடிப்படையில் குறைந்த விலையில் வழங்கப்பட்ட வாகனங்களை அதிக விலையில் விற்பனை செய்துவிட்டதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதையடுத்து, இவ்வாகனங்களைக் கண்டுபிடிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸாரின் உதவியோடு அத்தகைய வாகனங்கள் தற்போது எங்கு இருக்கின்றன என்பது பற்றியும் அவற்றை வைத்திருப்பவர்கள் யார் என்பது பற்றியும், விசாரணை செய்யுமாறு ஜனாதிபதி நிதியமைச்சுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் உபயோகத்துக்காக வழங்கப்பட்ட இவ் வாகனங்கள் தற்போது யார் வசமுள்ளன என்பதுபற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படியும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இவ் வாகனங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமானவையாக இருப்பதனால், அரசாங்கத்தின் அனுமதியின்றித் தம்முடன் வைத்திருப்பது குற்றமான செயலாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## வீதி ஒழுங்கு முறை: மாணவர்களுக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை ஊழியர்களால் யாழ் நகரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி ஒழுங்குமுறை நடவடிக்கைகளில், தற்போது. யாழ். இந்துக்கல்லூரி, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாணவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

கல்லூரி விடுமுறையானபடியால், மேற்படி மாணவர்கள் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு காலையில் 16 மாணவர்களும் பிற்பகலில் 16 மாணவர்களும் சேவையாற்றிவருகிறார்கள்.

''கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது இம் மாணவர்கள் வீதிகளில் நின்று சேவையாற்றுவது, பாராட்டத்தக்க ஒரு விடயமாகும்'' என்று வீதி ஒழுங்கு முறைகளைக் கண்காணித்துவரும் யாழ் மாநகரசபை ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (வி)

## நேபாளத்தில் புதிய பிரதமர் நியமனம்!

(காட்மண்டு)

நேபாளத்தில் திரு.லோகேந்திரபகதூர்சிங் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேபாள வானொலி மூலம் மன்னர் பிரேந்திரா இந்த நியமனம் தொடர்பாக நேற்றுக்காலை அறிவித்தார்.

புதிய அரசு பலதலைவர்களுடன் பேச்சு நடத்தும் என்று மன்னர் பிரேந்திரா கூறினார்.

பலகட்சி ஜனநாயக முறைக்கு ஆதரவு தெரிவிக்கும் இயக்கம் காரணமாக உருவாகியுள்ள நிலைமையை சமாளிக்க சில முக்கிய மாற்றங்கள் நேபாளத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1986ல் பதவியேற்ற அமைச்சரவை 46 மாத காலம் மட்டும் பதவியில் இருந்தது.

வெளியுறவுஅமைச்சர் பதவி விலகியதிலிருந்து இம்மாதம் முதலாம் திகதி அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டது.

அசாதாரண நிலைமைகளையொட்டி மன்னர் பிரேந்திராவுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் அரசியல் சாசன விதிகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு நேபாள பஞ்சாய கமிட்டி நேற்று பரிந்துரை செய்துள்ளது. (து)

## பஸ் விபத்து 22 பேர் பலி

(அமிர்தசரஸ்)

பஞ்சாப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 22 பேர் பலியானார்கள் ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

பிரயாணிகளுடன் வந்த இந்த பஸ் பள்ளத்தில் வீழ்ந்தமையினாலே இவ்விபத்து ஏற்பட்டது.

## வலி. வடக்கில் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை

(காங்கேசன்துறை)

வலி வடக்கில் இந்த மாதம் முழுவதும் கால்நடைகளுக்கான கோமாரி தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் கீழ் பல்வேறு பகுதிகளிலும் தடுப்பூசி ஏற்றும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கால்நடைகளைத் தாக்கும் பயங்கர நோயான கோமாரி நோய் இங்கு கொண்டுவரப்பட்ட இந்திய ஆடுகள் மூலம் யாழ் குடாநாட்டில் பரவிவந்ததும், உடனடியாக தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அந்நோய் கட்டுப்படுத்தப்பட்டதும் தெரிந்ததே,

தற்போது இந்தியாவிலிருந்து வரும் ஆடுகள் மூலம் இந்நோய் பரலக்கூடிய அபயம் நீங்கியுள்ளதால் இந்நோயை முற்றாக ஒழிக்கும் நோக்குடன் இந்த மாதம் முழுவதும் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பகுதிகளில் கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

அளவெட்டி, மல்லாகம் பகுதிகளில் கடந்த சில நாட்களில் ஏராளமான கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. இம் மாதம் 10ம், 11ம் திகதிகளில் தெல்லிப்பழை பகுதியிலும் 12-ம் திகதி மாவிட்டபுரம் பகுதியிலும் தடுப்பூசிகள் ஏற்றப்படும்,

முன்னர் தடுப்பூசி ஏற்றிய கால்நடைகளுக்கும் மீண்டும் தடுப்பூசி ஏற்றப்படுமெனவும் அப்படி ஏற்றினால்தான் கோமாரி நோயிலிருந்து முற்றாக பாதுகாப்பு அளிக்கமுடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து இந்த மாதம் முழுவதும் மாற்றுப்பகுதிகளிலும் தடுப்பூசி ஏற்றும் வேலைகள் மேற்கொள்ளப்படுமென தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (86)

## அலங்கார உற்சவம் இன்று முடிவடையும்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கலைநகர் வீயோடை முத்துமாரி அம்பாள் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அலங்காரஉற்சவம் இன்று சனிக்கிழமையுடன்முடிவடைகின்றது.

உற்சவகாலங்களில் தினமும் இரவுநேரத் திருவிழாவின்போது பெருந்தொகையான அடியார்கள் குறிப்பாக பெண்கள் கலந்துகொண்டு அம்பாளின் அருளைப்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (139)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம்!

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் 40 சதவீதமான இளைஞர்கள் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்படுவதை உறுதிசெய்யும்வகையில் சட்டங்களை உருவாக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் இத்தகவலை பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இளைஞர் அமைதியின்மை குறித்து, ஆராய நியமிக்கப்பட்ட ஆலோசனைக்குழு மேற்கண்டவகையில் அரசுக்கு சிபார்சுகளைத் தெரிவித்துள்ளதாகவும் இதுசம்பந்தமாக மேலும் விரிவாக ஆராயப்படும் என்றும், திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். (அ)

### மணிவாக்கு

கல்வியாற் பெரியவனுய் இருந்தாலும்
துஷ்டனுய் இருப்பவனிடம் சேரலாகாது.
— பர்த்ருஹரி நீதி

## நமது நோக்கு

### கண்டிக்கா செல்லவேண்டும் கண்காட்ட?

"மட்டக்களப்பில் ஒரு பொது வைத்தியசாலை இருந்தும் அங்கு கண் வைத்திய நிபுணரோ அல்லது பயிற்றப்பட்டநிபுணரோ இல்லை!" என்று மட்டக்களப்பு மருத்துவமனைக் குழு இலங்கை கண்தான சங்கத்திற்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் பல்லாண்டு காலமாகப் போதிய வசதிகள் அற்ற மாகாணமாக இருந்து வந்திருக்கின்றது.

பல பலமுள்ள அரசியல்வாதிகளும் அமைச்சர்களும் அப்பகுதியிலிருக்கின்றனர். மேலிடத்திலே சற்றுக் கண்காட்டியிருந்தால், அரசு தன் 'கடைக் கண்' பார்வையால் பல வசதியீனங்களைக் குறைத்திருக்கும்.

மக்களுக்கு வரும் நோய்களில் கண் நோய் உடன் கவனிக்கப்பட வேண்டியதொன்று.

பொது வைத்தியசாலையிலே, கண்வைத்திய நிபுணர் இல்லாவிடில், கண் நோயாளர் தாமே தமக்கு வைத்தியராகிவிடக்கூடும். சிலரின் இலவச ஆலோசனைகளைக் கேட்டு கண்ட கண்ட மருந்துகளைப் பாவித்துக் கண்ணைக் கெடுக்கும் வாய்ப்பும் ஏற்படலாம்.

உரிய காலத்தில் தகுதியானவரிடம் காட்டி, தகுந்த சிகிச்சை பெருவிடில், நிரந்தரமாகவே கண்பார்வையை இழக்கும் ஆபத்தும் உண்டு.

அங்குள்ள கண்நோயாளர் பலர் கண்டி போன்ற பிற இடங்களுக்குச் செல்ல வேண்டிய அவலநிலை உருவாகி விட்டது எனவும் அந்தக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

கண்டிக்குப் போய்வர வசதியும், வரய்ப்பும் அற்ற ஏழைக் கண்நோயாளர்கள் என்ன செய்யமுடியும்?

கண் வைத்திய நிபுணர்களின் பற்ருக்குறை, வெளிநாடு செல்லல், பின்தங்கிய பகுதிகட்கு டாக்டர்கள் செல்லத்தயக்கம் போன்ற பல காரணங்களைக் கூறி வைத்திய நிபுணர்களை மட்டக்களப்பிற்கு அனுப்பக் காலதாமதமாகலாம்.

ஆனல், ஒரு மாவட்டப் பொது வைத்தியசாலையில் இத்தகைய குறைபாடுகள் தொடர்வது தவிர்க்கப்பட வேண்டும்.

வைத்திய வசதிக்காகப் பிற மாவட்டங்களுக்கு அலைய வேண்டிய அவலநிலை தொடரக்கூடாது.

இதனிடையே, நடமாடும் சிகிச்சை முகாமை மட்டக்களப்பில் நடத்துமாறு மருத்துவமனைக் குழு கண்தான சங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நடமாடும் ஜனதிபதி செயலகம், நிர்வாகத்தைச் கிராமங்களுக்கே எடுத்துச் செல்லும் நல்ல பணியைச் செய்து வருகின்றது.

இதைப் பின்பற்றி வேறு துறைகளிலும் நடமாடும் சேவைகள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும்மக்களுக்கு ஆறுதல் தந்துகொண்டிருக்கின்றன.

அந்த வகையில், நடமாடும் சிகிச்சை முகாம் மட்டக்களப்பிலும் நடாத்தி இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

## தவக்கால நற்சிந்தனை

### தியாகம்

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தியாகத்தின் உருவமாக மனித உருவில் சாதாரண மனிதரோடே தனது வாழ்வை வாழ்ந்து காட்டியவர்தான் கிறிஸ்து. அந்தத் தியாகியின் நினைவு நாட்சுள்தான் இந்த தவக்காலமாகும். ஒருவன் எதையும் இழப்பான் தன் உயிரைத் தவிர ஆனல் அவரோ தன் உயிரையு உலக மீட்புக்காக துறந்ததாலே அந்தத் தியாக வாழ்வு ஆரம்பமானது. "தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம்" என்றார் காந்தி

ஆனல்கிறிஸ்துவோ தன்னை இத்தனை சித்திரவதைகளிலும் ஏளன கேலிப்பேச்சுக்களிலும், ஏலம் போடும் மானிடக் கூட்டத்தின் நடுவே கொலைக்குத் தீர்ப்பிட்ட போதும் அந்தச் சிலுவையில் இறுதிமூச்சை விடுகின்ற வேளையிலும் "பிதாவே இவர்கள் அறியாமற் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்" என்றார் என்றால் அந்த நிலையில் அவரது மன்னிக்கும் மனத்திற்கும் தன்னைத் தியாகம் செய்வதில் உலக மீட்புக்கு உயிரைக் கொடுக்க முனைந்த அந்த சரித்திர நாயகனின் சரித்திரம்தான் இன்றும் நினைவுகூரப்படுகின்றது. இந்தத் தியாகத்தியில் விளைந்தது தான் கிறிஸ்தவ உலகம். அதன் வழியில் வாழும் நாம் எமக்காக நாம் வாழ்ந்தால் எமது புகழ்ச்சிக்கு ஏங்கி வாழ்வதால்அவரது நாமத்தை நாமும் இன்று சிலுவையில் தொங்கவிடும்அந்தக் கொடிய கூட்டத்தில் ஒருவராகவே வாழ்கிறோம் என்பதனை உணர்வோம்.

எந்தத் தியாகத்திலும் சுயநலம், பலன் எதிர்பார்ப்பு, புகழ் தேடும் நிலையில் இருக்கக்கூடாது என்பதனை கிறீஸ்துவின் சாயலில் வாழும் ஒவ்வொருவரும் உணர்வோம். அந்த தியாக தீபங்கள்தான் அமைதியான சமாதானமான உலகிற்கு ஒளியாக மாறு

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று விசவத்தனை முருகன் தேர்

# கோவிற்பணி பற்றி ஓர் கண்ணேட்டம்

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்." தமிழர் வாழ்வில் கோவில் இல்லையேல் வாழ்வு இல்லை என்பது உண்மை.

பண்ணகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலுக்குப் பல பெருமைகள் உண்டு. இன்று தேர் உற்சவமாகும்.

தினசரி ஆலய தரிசனம் செய்துவரும் பண்டிதர் அ. ஆறுமுகத்தை அங்கு கண்டேன். அவர் அருகில் சைவப் பெரியார்—சைவமணி கோவில் பரிபாலனசபை பொருளாளருமான சோ. க. வேலாயுதரையும் கண்டேன். சில கேள்விகள் கேட்டபொழுது மகிழ்ச்சியுடன் பதில் தந்தனர்.

கேள்வி: பிறக்கின்ற மனிதர்கள் அனைவரும் ஆண்டவனை வணங்கத்தான் வேண்டுமா?

பதில்: ஊரும் பேரும் உருவும் குணமுமில்லாதவராய், பாலில் நெய்போல எங்கும் வியாபித்து நிற்கும் பரம்பொருள் பரமசிவம்.

கருணையே உருவான பரமசிவன், உருவத் திருமேனி தாங்கி நாம் இருக்கும் இடம் தேடி எமக்கு அருள்செய்ய, விநாயகராக, முருகனுக, வைரவப்பெருமானுக எழுந்தருளி வருகின்றார். அவனை நாள் தோறும் வணங்குதலே மானிடப் பிறப்பின் பணியாகும்.

கேள்வி: இக்கோவிலைப் பற்றிச் சொல்லமுடியுமா?

பதில்: 200 ஆண்டுகளுக்கு முன் பழைமைவாய்ந்த கோவிலாகும். சென்ற 32 ஆண்டுகளாக ஊர்மக்களால் தெரிவு செய்யப்பெற்ற பரிபாலன சபையின் கண்காணிப்பில் நடைபெற்றுவருகின்றது.

கேள்வி: இக்கோவிலில் தங்களை மகிழ்விப்பது?

பதில்; ஆண்டுதோறும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த தேரில், எம்பெருமான் வள்ளி, தேவசேனு சமேதராக அமர்ந்து பவனி வரும் காட்சி. ஆடவரும், மகளிரும் விரதமிருந்து பிரதட்டை செய்தும், அடியழித்தும், சிவநாமங்களை ஓதிக்கொண்டு சுவாமியின் பின்னுல் வரும் காட்சி.

கேள்வி: இக்கோவில் பற்றிய பாடல்கள் ஏதாவது உண்டா]

பதில்: விசுவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ் உண்டு. அதிலிருந்து சில வரிகள்:

"...நீதி செய்யும் அரசே வருக; பொய்யருக்கும் பொய்யா வருக. விரைந்திந்தப் பொழுதில் விசவத்தனையில் எங்கள் பொன்னே வருக; புனிதா வருக வருகவே...!"

திரு. சோ. க. வேலாயுதர் பதிலளிக்கின்றார்:

கேள்வி: ஆண்டவன் தான் எங்கும் இருக்கின்றனே; அவனை ஆலயத்தில் சென்று தான் வணங்கவேண்டுமா?

பதில்: அங்கிங்கெனுதபடி எங்கும் நீக்கமறநிறைந்திருப்பவன் இறைவன். அவன் ஆலயத்தில் சாந்நித்தியமாக எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கின்றன். ஆண்டவன் எங்கும் இருந்தாலும், ஆலயத்திலே அனைவரும் அவனது வடிவத்தைக் கண்ணாரக்கண்டு, கருத்தார உணர்ந்து, அநுபூதி பெற்று அனுபவிக்கமுடிகிறது. எனவேதான் 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று கூறிவைத்தார் ஒளவை மூதாட்டி.

கேள்வி: இக்கோவிலிலுள்ள அன்னதான மடத்தின் சிறப்புப் பற்றி. ?

பதில்: இதற்கெனத் தனியாகச் சபை ஒன்றுண்டு. ஊர் மக்கள் இதற்குத் தாராளமாக உதவியுள்ளார்கள். இம்மடம் சமூகத்தின் பல பணிகளுக்கும் உதவுகிறது. திருமண நிகழ்ச்சிகள், கலைவிழாக்கள், பொதுக்கூட்டம் போன்றவற்றுக்கும் உதவுகின்றது.

கேள்வி: கோவிலின் பின்புறமுள்ள நூல்நிலையம் பற்றி...?

பதில்: வெறும் ஏட்டுப் படிப்போடு நிற்காது, ஊரவர்களுக்குப் பரந்த அறிவினைக் கொடுக்க ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இளைஞர்கள் பலர் 'ஈழநாடு' உட்படப் பல பத்திரிகைகளையும் கருத்தூன்றிப் படிக்கிறார்கள். சமூகசேவையாளர் திரு. சி. பரமகுருவே இதனைத் தொடக்கிவைத்தார். திரு. க. இராமலிங்கத்தின் கொடையால், இன்று இவ்வளவு அழகாக அமைந்துள்ளது.

கேள்வி: இக்கிராமத்திலிருந்து வெளிநாட்டுக்குச் சென்றோர் உதவுகின்றார்களா?

பதில்: பலர் உதவுகிறார்கள். வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பியோர் பட்டியலைப் பாருங்கள்.

அறிக்கையைப் பார்க்கின்றோம்; பட்டியலைப் பார்க்கின்றோம். ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற பகுதிகளிலிருந்தும் பணம் அனுப்பப்பட்டுள்ளது. முருகன் அருள் அங்கெல்லாம் பரவட்டும்.

பேட்டி கண்டவர்:
இ. கிருஷ்ணதுரை.

பதில் தந்தவர்கள்:
பண்டிதர் அ. ஆறுமுகம்,
சோ. க. வேலாயுதர்.

## இராசி பலன்

**07- 04- 1990**
**சனிக்கிழமை**

மேடம்: காரியவெற்றி, தடுமாற்றம், உஷ்ணரோகம், பொருட்சேதம், தேகமெலிவு.

இடபம்: வீண்பழி வரும், காரியசித்தி, அயலவர் உதவி, சத்துருபீடை, சுகம்.

மிதுனம்: காரிய சித்தி, பணவரவு, குடும்பச் சிறப்பு, நற்சிந்தனை.

கடகம்: உரிமைப் பிரச்சனை, காரிய சித்தி, பயம், பணவரவு, சமாதானம்.

சிங்கம்: வீண்தொல்லை, சோம்பல், பூமியால் லாபம், கோபம், தர்மசிந்தை.

கன்னி: உறவினர்தொல்லை, புதிய இடம், பூமியால் லாபம், புத்தியால் வெற்றி, பிரயாணம்.

துலாம்: உதவியின்மை, பயந்த நிலை, கௌரவம், உஷ்ணவியாதி, கவலை.

விருச்சிகம்; அதிகார எண்ணம், லாபம், நித்திரைச் சுகம், தனலாபம்.

தனுசு: குடும்பத்தில் மனக்குமுறல், அற்பபுத்தி, வாகன சுகம், களவு போதல்.

மகரம்: பிரயாசை மிகுதி, மன மகிழ்ச்சி. காரியத்தடை, இடமாற்றம்.

கும்பம்: தாய்வழிப் பீடை, தனவிருத்தி, சத்துரு வஞ்சனை, அமைதியின்மை.

மீனம்: பசியின்மை, அற்பலாபம், கவலை, கடவுள் சிந்தை.

இ. மகாதேவா

★ **விசவத்தனை முருகன் தேரேறும் நாள் இன்று**

விசவத் தனைப்பதியில் வீற்றிருந் தெல்லாத்
திசையிலுள் ளார்க்குமருள் செய்யும் - இசைவுடனே
கந்தக் கடவுள்தே ரேறுகின்றார் உய்திபெற
வந்திடுவீர் யாரும் மகிழ்ந்து.

- பண்டிதர். அ. ஆறுமுகம்

## றமழான் சிந்தனை

### நற்குணம்

நபிமுஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினர்கள்: "மனிதனுடைய பெருந்தன்மை அவனுடைய நற்குணங்கள் தான்"

மேலும் நபிமுஹம்மத் (ஸல்) அவர்கள் கூறினர்கள். "எல்லாவற்றிலும் நல்ல குணம் உள்ளவரே மனிதர்களில் சிறந்தவராவார்".

"நல்ல குணங்கள் இருப்பது நல்ல விதிக்கும் இன்னும் பரகத் (அபிவிருத்தி)க்கும் காரணமாக இருக்கும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்.

"கெட்ட குணங்கள் இருப்பது கெட்ட முடிவையே தரும்" என்று நபி அவர்கள் கூறினர்கள்.

**நோன்பு தொழுகை நேர அட்டவணை**

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4-32 |
| சுபஹ் | 4-47 |
| சூரிய உதயம் | 6-07 |
| லுஹர் | 12-20 |
| அஸர் | 3-19 |
| மஃரிப் | 6-21 |
| இஷா | 7-40 |

## பலதும் பத்தும்

### செனட்டர்களின் தலைவலி

அமெரிக்காவிலே சூழல் பாதிப்புக்கு முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றதல்லவா?

கார் போன்றவை வெளிவிடும் நச்சுவாயுக்களைக் குறைக்க, 'எதனேல்' என்ற மாற்றுப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தானியங்களிலிருந்து உற்பத்தியாகும் திரவம். இதன் பாவனை அதிகரித்தால் யாருக்கு லாபம்? விவசாயத் துறையினருக்கு யாருக்கு நட்டம்? எண்ணை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு. 'எதனேல்' பயன்படுத்துவதற்கேற்ற கார்களை உற்பத்தி செய்வதற்கும் முதலீடுகள் அதிகம் தேவை. இதனை ஆதரிக்க வரவு—செலவுத் திட்டத்திலும் பெருமளவு பணம் ஒதுக்க வேண்டும்.

செனட்டர்களுக்கு இது 'தலைவலி' யாகி விட்டது. அடிமைகளை வைத்து விவசாயத்தைப் பெருக்கியவர்களுக்கும், நகரப்புறக் கைத் தொழிலாளர்களுக்கும், பல ஆண்டுகளுக்கு முன்பே உள்நாட்டு யுத்தம் நடைபெற்றதல்லவா? அதுபோன்ற நிலை உருவாகி விடுமா என்று கூட அஞ்சுகிறார்களாம்...!

வாணி

# கவனிப்பார்களா?

கிராமத்திலிருந்து முதல் பஸ்ஸைப் பிடித்து வந்து துண்டு எடுப்பவர் கியூவில், தமது முறைவரும்வரை காத்திருக்குப்போது அதற்கு பின்னுல் அரை மணி ஒருமணி நேரம் தாமதித்து வருபவர், கியூவில் நிற்காமல் நேரடியாக சென்று மருத்து வாங்கிச் சென்றுவிடுகிருர்.

யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் தினமும் இக்காட்சியைக் காண முடிகிறது. தூர இடங்களிலிருந்து வரும் வயோதிபர்கள், கைக்குழந்தையுடன் தாய்மார்கள். இந்தக் காட்சியைப் பார்த்து எதுவும் செய்ய முடியாமல் பொறுமையோடு இருக்கிருர்கள்.

இங்கு ஒரு ஊழியர் பணியாற்றுகிருர். அவர் நோயாளியின் துண்டில் பெயர், வயது, தேதி எழுதி விடுகிருர். அத்துடன் அவர் கடமை முடிந்ததா? கியூவை மீறிச் செல்பவர்களை தடுப்பதில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

வெளி நோயாளர்கள் மருந்து எடுக்கும் இடத்திலும், கிளினிக் மருந்து எடுக்கும் இடத்திலும் இப்படியான காட்சி அடிக்கடி இடம்பெறுகிறது.

நோயாளிகள் ஒழுங்காக கியூவில் நின்று மருந்து பெற்று செல்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

—பாதசாரி

## தவக்கால

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. அந்த ஒளியில் காய்பவராக இராது அந்த ஒளிகளாக நாமும் மாற இந்த நாளில் சிந்திப்போம் செயற்படுவோம்.

அருட்சகோ.
பி. மார்க் இக்னேசியஸ்
C. M. S. F.

## மீளக்குடியமர்தல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பணம் எதிர்வரும் 10 ந் திகதியும், காங்கேசன்துறைவடக்கு கிராம சேவையாளர் பிரிவில் கடந்த 3-ம் திகதி வழங்கவிருந்த நிவாரணப் பணம் தவிர்க்க முடியாத காரணத்தினுல் இம்மாதம் 11 - ம் திகதி புதன்கிழ்மைக்கும் பிற்போடப்பட்டுள்ள தென்று அறிவிக்கப்படுகிறது. (71)

# இப்படியும் நடக்கிறது

"என்று தணியும் இந்த சுதந்திரத் தாகம்" என்று அன்று பாடினுர் பாரதியார்.

"என்று தணியும் இந்த வெளிநாட்டு மோகம்" என்று இன்று பாடலாம் போலிருக்கிறது.

"இந்தா அனுப்பப்போகிருேம்... நாளைக்கு அனுப்பப் போகிருேம்..." என்று எச்சரிக்கப்பட்ட பல வெளிநாடுகளுக்கு, இன்றும் நம்மவர்கள் (பல லட்சங்களை வாரி வழங்கி) சென்றுகொண்டுதானிக்கிருர்கள்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் காலி வீதி வழியாக பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். பிரிட்டிஷ் தூதரகத்துக்கு எதிரே நீண்ட 'கியூ'. அப்பொழுது காலை ஐந்து மணியிருக்கும்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் ஆஸ்திரேலியா தூதரகம் முன்பாக பஸ்ஸில் செல்லநேரிட்டது. அங்கு பெருந்திரளானவர்கள் முண்டியடித்துக்கொண்டு 'கியூ'வில் நிற்பதைக் காணமுடிந்தது. அப்பொழுது நேரம் காலை நான்கு மணி முப்பது நிமிடம்.

விடியலுக்காக அந்த விடியும் வேளையில் கால்கடுக்க காத்திருக்கும் நம்மவர்களைப் பார்க்கும் போது மிகவும் பரிதாபமாக இருந்தது.

ஒரு சிறு குறிப்பு: தூதரகங்களில் பாதுகாப்புச்சேவையில் உள்ளவர்கள் நம்மவர்களை 'கண்டபடி' பேசுவது தான் கசப்பாக இருக்கிறது.

'ஊடுருவ'

# குடிநீர், மின்வசதியின்றி தவிக்கும் ஊழியர்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ். வீடமைப்புச் செயலகத்திலுள்ள அரசாங்கத் திணைக்களங்களின் ஊழியர்கள் தாகத்தால் தவிக்கின்றனர். இச்செயலகக் கட்டிடத்தில் குடிநீர், மின்சார வசதிகள் இன்மையே அவலநிலைக்குக் காரணமாகும்.

யாழ் தேசிய வீடமைப்புச் செயலகத்தில் பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மாகாண வீடமைப்புத் திணைக்களம், தேர்தற் திணைக்களம் ஆகியன இயங்கிவருகின்றன, தற்போது இங்குள்ள அலுவலகங்களில் சுமார் நூறு ஊழியர்கள் உள்ளனர்.

கடந்த இரண்டரை வருடகாலமாக இவ்வீடமைப்புச் செயலகத்தில் இந்திய அமைதிப் படை முகாம் அமைந்திருந்தது. இதனுல் முன்னர் இடம் பெயர்ந்திருந்த இத்திணைக்கள அலுவலகங்கள் இரண்டரை வருடங்களின் பின்னர் மீண்டும் தேசிய வீடமைப்புச் செயலகத்திற்கு அண்மையில் 'குடி' புகுந்தன.

மாகாண வீடமைப்புத் திணைக்களம் இப்பொழுது இக்கட்டிடத்திற்கு உரிமைகோருகின்றது தேசிய வீடமைப்புத் திணைக்களம்தான் இக்கட்டிடத்தின் உரிமையாளராக இருந்ததாகக் கூறப்படுகிறது.

யாழ்.தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு இச்செயலகக் கட்டடம் பாரம் கொடுக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடத்திற்கு யார் உரிமையாளர் என்ற சிக்கலில் இச்செயலகக் கட்டிடக் குடிநீர் விநியோகம், மின்சார இணைப்புத் திருத்தவேலைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரச்னை எப்பொழுது தீரும்; தமது தண்ணீர்த்தாகம் என்று தீர்க்கப்படும் எனத் திணைக்கள ஊழியர்கள் தவிக்கின்றனர். (54)

# "ஆலயங்கள் சிறப்புற்ருல் கிராமம் வளம் பெறும்"

(காங்கேசன்துறை)

"கடந்த காலங்களில் நாம் பட்ட துன்பங்களின் போது எமக்கு அடைக்கலம் தந்து ஆபத்திலிருந்து காப்பாற்றியவை நமது ஆலயங்கள்தான். ஆகவே ஆலயங்களைப் பேணுவதிலும் உற்சவங்களை ஒழுங்குமுறைப்படி நடத்துவதிலும் நாம் அதிக அக்கறை கொள்ள வேண்டும்."

இவ்வாறு தெல்லிப்பழை ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த உற்சவத்தை கொடியேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசிய பிரமஸ்ரீ ச. சி. பாலசண்முகக் குருக்கள் கூறினுர். தேவஸ்தான ஆதீனகர்த்தா சிவஸ்ரீ. ச. திருச்செந்தில் நாதசர்மா தலைமையில் நடைபெற்ற இக்கொடியேற்ற விழாவில் அவர் மேலும் பேசுகையில்: "கடந்த காலங்களில் கூட துன்பங்கள் வந்த போது நாம் ஆலயங்களை நோக்கியே ஓடினேம். அங்கு ஆண்டவனிடம் சரணடைந்தோம். ஆண்டவன் எம்மை அர்ப்பணித்து காத்து அருளினுர். ஆகவேதான் ஆலயங்களைப் பேணுவதும் அங்குள்ள ஆண்டவனுக்கு முறையாக அபிடேக, ஆராதனைகள், உற்சவங்கள் நடத்துவதும் எமது கடமை என்பதை நாம் உணர வேண்டும். ஆலயங்கள் சிறப்புற்ருல்தான் அந்த கிராமமே வளம்பெற முடியும்" என்ருர். (86)

# "இலட்சியத்தை வென்றடைய உறுதியாக இருக்கின்ருேம்"

## அறிமுகக் கூட்டத்தில் செங்கதிர்

(நெல்லியடி)

"எமது இலட்சியத்திற்குத் தடையாக இருக்கும் எந்தச் சக்திகளையும் எதிர்த்துப் போரிடத் தயங்கமாட்டோம் என்பதனை, இந்தியாவுடனுன போரின் மூலம் நாம் மெய்ப்பித்துக் காட்டியுள்ளோம் இந்தப் போரில் ஒரு வல்லாதிக்க சக்திக்கு எதிராகப் போரிட்டு வெற்றிபெறுவதற்குப் பக்கபலமாய் நின்ற தமிழீழ மக்களாகிய உங்களுக்கு நாம் நன்றி தெரிவிப்பதில் பெருமையடைகிருேம்."

இவ்வாறு, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சிற்றூரவை அங்கத்தவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைச்செயற்குழு உறுப்பினர் திரு. என். செங்கதிர் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்திற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வடமராட்சி மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. அரசண்ணு தலைமை வகித்தார்.

திரு செங்கதிர் மேலும் கூறியதாவது:

"இந்தியாவுடன் நாம் போரிட்டபோது தமிழ்த் துரோகத் தலைவர்களும் துரோகக் கும்பல்களும் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று எமது போராட்டத்தை ஒழிக்க முனைந்தனர். ஆனுல் எமது இராணுவ, அரசியல், இராஜதந்திர நடவடிக்கைகளால் இவர்களை வென்று, தமிழீழப் போராட்டத்தை மேலும் செழுமை உடையதாக்கிக் கொண்டுள்ளோம். இந்தப் போரில்683புலிகளும்,6,000க்கு மேற்பட்ட பொதுமக்களும் மரணமடைந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும் எந்த இலட்சியத்திற்காக மரணம் அடைந்தார்களோ, அந்த இலட்சியத்தை வென்றடைய நாம் தொடர்ந்தும் உறுதியாக நிற்கிருேம்,

"இதுவரை அரசியல் பிரிவாகச் செயற்பட்டுவந்த எமது அரசியற் பிரிவே தற்பொழுது மக்கள் முன்னணி என்ற புதிய பெயரில் மக்களுடன் இணைந்து செயற்படவுள்ளது. எனவே இம்மக்கள் முன்னணியில் தெரிவுசெய்யப்படவுள்ள உறுப்பினர்கள் நீதி தவருதவர்களாகவும், இலட்சியம் கொண்டவர்களாகவும், உறுதியுடையவர்களாகவும்செயற்பட வேண்டும்"

இவ்வைபவத்தில் திரு. எஸ். கணபதிப்பிள்ளை, திரு.ஸ்ரனிலஸ் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். மக்கள் முன்னணியின் நெல்லியடிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு.குணபால் நன்றி தெரிவித்தார். (55)

# "சனசமூக நிலையங்களுக்கு பாரிய பொறுப்பு உண்டு"

(காங்கேசன்துறை)

"சனசமூக நிலையங்கள் வாசிகசாலைகளாக மட்டும் இயங்கிய நிலைமாறி இன்று அரசாங்க கொந்தராத்து வேலைகளையும், அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ள வழிபிறந்துள்ளது. ஆகவே சனசமூக நிலையங்களை சிறப்பான முறையில் இயக்கி எமது பகுதிகளின் அபிவிருத்திக்குவழி சமைக்க வேண்டும்."

இவ்வாறு கீரிமலை நகுலேஸ்வரா சனசமூக நிலைய திறப்பு விழாவிலும், மதி விளையாட்டுக் கழக அங்குரார்ப்பண வைபவத்திலும் கலந்து உரையாற்றிய வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா கூறினுர்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

திரு. த. முரளீதரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ். மாவவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவமகாராஜாவும் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

"எமக்கு ஏற்பட்ட அழிவுகளையும், இழப்புக்களையும் சீர் செய்ய சனசமூக நிலையங்கள் போன்ற பொதுநல ஸ்தாபனங்கள் ஊடாக திட்டங்களை தீட்டி கிராம ரீதியில் செயற்படுத்த வேண்டும்" என்று திரு. சிவமகாராஜா பேசுகையில் கூறினுர். (86)

# மந்திகையில் 'போருட்' பொருட்காட்சி

(வடமராட்சி)

மந்திகை 'போருட்' பொருட்காட்சிச் சாலையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான பொருட்காட்கி சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

தையல், சித்திரம், சிற்பம், சாறிப் பிறிண்டிங், பன்ன வேலைப்பாடுகள் போன்ற பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் செல்வி வசந்தா, திரு சி சுந்தரலிங்கம் போன்ற மாணவிகளின் கைப்பணிப் பொருட்கள் கூடுதலாக காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பூச்சாடி தாங்கும் நூல் உறிகள், மகளிர் நீள் சட்டைகளும் புலி, சிங்கம் ஒன்ருக இணைந்திருக்கும் சாறிப்பிறிண்டும், தலைவர் பிரபாகரனின் அலங்கரிக்கப்பட்ட உருவமும் வைக்கோலால் ஒட்டப்பட்ட எம். ஜி. ஆர். உருவமும் அனைவரையும் கவர்ந்துள்ளது.

இப் பொருட்காட்சி 12ம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (51)

# அச்சுவேலியில் நினைவுத் தூபிகள்

(அச்சுவேலி)

வீர மரணமடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க போராளிகளின் நினைவாக அச்சுவேலியில் இரண்டு நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை இராணுவத்துடன் தாவடியில் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த அச்சுவேலியைச் சேர்ந்த ரூபன் (அல்பிரட்) நினைவாக அச்சுவேலி - சங்கானை வீதிச் சந்தியில் ஒன்றும் வீர மரணமடைந்த ஏனைய போராளிகள் நினைவாக நீர்த்தடாகத்துடன் கூடிய நினைவுசின்னம் அச்சுவேலி பஸ் நிலையத்திலும் அமைக்கப்பட்டு வருகின்றது.

# அறவழி நூலக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

அறவழி நூலகசபையினர் நடத்தும் நூலக கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை மட்டுவில் பன்றி தலைச்சி அம்மன் கோவிலில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை அறவழிப் போராட்டக் குழுவின் நூலக சபை மேற்கொண்டுள்ளது.

மருத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், புவியியல், பொருளாதாரம், சமயம், மொழி, இலக்கியம் உட்பட பல நூல்கள் இக் கண்காட்சியில் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சர்வகட்சி மாநாட்டில்

# முன்வைக்கப்பட்ட மூன்று விடயங்கள் பரிசீலனையில்

(கொழும்பு)

''சர்வகட்சி மாநாட்டின் போது முன்வைக்கப்பட்ட மூன்று முக்கியவிடயங்களான அடிப்படை மனித உரிமைப் பிரச்சனை- பாதுகாப்பு - வெகு ஜன தொடர்புத் துறையை தாராளமயப்படுத்தல் ஆகியன குறித்து, தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இவை குறித்தமுடிவுகள் விரைவில் சகல கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும்.''

சர்வகட்சி விவகாரங்கள் தொடர்பான ஜனதிபதி ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் நேற்றுக் காலை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட கட்சிகளில், 16கட்சிப் பிரதிநிதிகள் குழு அடிக்கடி சந்தித்து பல முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடி வருகின்றனர். இக் கலந்துரையாடல்களில் முன்வைக்கப்பட்ட பிரச்சனைகளின் முடிவுகள் பற்றி 26 கட்சிகளுக்கும் விரைவில் அறிவிக்கப்படும் என்றார். (அ)

## "அன்னை பூபதியின்

# போராட்டம் மூலம் எமது மண் சரித்திரம் படைத்துவிட்டது"

(புங்குடுதீவு)

''இலங்கை சுதந்திரம் அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனல் அன்றைய காலங்களிலிருந்து இற்றை வரைக்கும் இங்குள்ள மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து வரவில்லை. பல இன்னல்களின் மத்தியில் தான், தேவைகளை பூர்த்தி செய்து வந்தவர்கள் இலங்கை சுதந்திரம் பெற்றுள்ள போதிலும் அங்கு வாழ்ந்து வந்த மக்கள் எந்த விதத்திலும் சுதந்திரமில்லாமலே வாழ்ந்து வந்தார்கள்''

இவ்வாறு புங்குடுதீவு 11-ம் வட்டாரத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய தமிழ்ஈழ விடுதலைப்புலிகளின் தீவுப் பகுதி அரசியற் பிரிவைச் சேர்ந்த திரு- நரேஷ் குறிப்பிட்டார்.

திரு. கா. சவரிமுத்து தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. நரேஷ் தொடர்ந்து உரையாற்றுகையில்; ''எமது மக்களையும் எமது மண்ணையும் பாதுகாக்கவே எமது போராட்டம் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. எமது இலட்சியங்கள் இன்றோடு நின்றுவிடாது மக்களின் உரிமைக்காககுரல் கொடுப்போம்''என்ருர்.

இக் கூட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் மகளிர் படைப்பிரிவைசேர்ந்த செல்வி சோபிகா கூறியதாவது: 'நாம் பல இழப்புகளைச் சந்தித்து அதன் மூலமாக இப்போது ஒரு அமைதியான சூழ்நிலையினை பெற்றிருக்கின்ருேம்.

எமது விடுதலை வீரர்களின் வீரமிக்க செயல்களினுல் களத்திலே நின்று போராடி பல உயிர்த்தியாகங்கள் மூலமாகவும் இரத்தம் சிந்தியுமே எமது சுதந்திர மண்ணில் காலடி வைத்து நிற்கிருேம்.

''தமிழ் மக்களின் விடுதலைக்காக உன்னத அகிம்சைப் போராட்டத்தில் குதித்த எம் அன்னை பூபதி- கணபதிப் பிள்ளையின் நினைவஞ்சலிகளை வடக்கு கிழக்குப் பகுதிகளில் இன்று நாம் கொண்டாடி வருகின்ருேம். அந்த அன்னையின் வீரமிக்க போராட்டத்தின் மூலமாக எமது மண் சரித்திரம் படைத்து விட்டது.

''எம் மக்களின் துயரினைக் கண்டு அவையெல்லாம் நீங்கப்படவேண்டுமெனநிபந்தனையற்ற போர்நிறுத்தம், பேச்சுவார்த்தையை முன்வைத்து சாகும்வரை உண்ணுவிரதமிருந்த எம் அன்னை ஒருபுனிதமான தியாகச் சுடர்''

இக்கூட்டத்தில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த திரு. கே. இராமச்சந்திரன், புங்குடுதீவு நயினை பல. நோ. கூ. சங்க தலைவர் திரு. ப. கனகலிங்சம், முன்னுள் புங். நயி.பல. நோ. கூ. சங்க தலைவர் திரு. சு. கருணுகரன் ஆகியோரும் உரையாற்றினுர்கள். [101]

# மன்னுர் செய்திகள்

குருநாகல் மறைமாவட்ட ஆயர் கலாநிதி எஸ். றேமன் பீரிஸ் ஆண்டகை அண்மையில் மன்னுர் மாவட்டத்துக்கு வருகை தந்து, கடந்த வன்செயல்களினுல் பாதிப்பு அடைந்த கிராமங்களை பார்வையிட்டார். அவருடன் அகில இலங்கை வாழ்வோதய இயக்குநர் அருட்திரு கமிலஸ் பெர்ணுண்டோ, வாழ்வோதய யாழ்ப்பாண இயக்குநர் அருட்திரு ம. இ.பயஸ் இயக்குநர் சபையினர் பலரும் வந்திருந்தனர்.

### உணவு முத்திரை

மன்னுர் மாவட்டத்திலுள்ள, மன்னுர், நானுட்டான், முசலி, அடம்பன், மடு ஆகிய உதவி அரச அதிபர் அலுவலகங்களில் உணவு முத்திரைகள் எழுதும் வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கடந்த மார்ச் மாதத்துடன் உணவு முத்திரைகளின் புள்ளிகள் முடிவு அடைந்து போனமையால் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் பொதுமக்கள் உணவு முத்திரைகளை கஷ்டமின்றி பெறுவதற்காக, வேலைகள் யாவும் துரிதமாக நடைபெறுகின்றன. மன்னுர் பிரிவு உதவி அரச அதிபரின் கீழ் உள்ள கிராம சேவையாளர் பகுதிக்கு எதிர்வரும் 14-ம் திகதிக்கு முதல் உணவு முத்திரைகளின் விநியோகம் நடைபெறும் என உதவி அரசஅதிபர் திரு. ரீ. இராமலிங்கம் தெரிவித்தார்.

### இறுல் தொழில்

மன்னுரில் தற்சமயம் பேசாலை, சவுத்பார், தலைமன்னுர், எருக்கலம்பிட்டி, பள்ளிமுனை போன்ற கடல் பிரதேசங்களில் இருல் தொழில் தற்சமயம் மீனவர்களுக்கு நல்ல பயனை அளித்து வருகின்றது. முன்னர் இந்திய மீனவர்களின் தொல்லையால் இப் பகுதியில் இத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. தற்சமயம் இவர்கள் வரவு நிறுததப்பட்டுள்ளதால் வருவாய் அதிகரிக்கப்பட்டுள்ளதாம். இப்பகுதிகளில் பிடிக்கப்படும் ஒரு கிலோ இருலின் விலை 250 ரூபாவாகும். மேலும் இப்பகுதியில் மிகவும் பெரிய அளவிலான இருல்கள் பிடிக்கப்படுகின்றன.

### பதில் சுகாதார அதிகாரி

மன்னுர் மாவட்டத்தில் சுகாதார அதிகாரியாக கடமையாற்றிய டாக்டர் எஸ். சிவபாதம் யாழ்ப்பாண நகர வைத்திய சுகாதார அதிகாரியாக இடமாற்றம்பெற்றதையடுத்து புதிய பதில் சுகாதார அதிகாரியாக வவுனியாவிலிருந்து சிரேட்ட சுகாதார பரிசோதகர் திரு. பொ, பத்மநாதன் நியமனம செய்யப்பட்டுள்ளார்.

### சம்பளம் 'அதிகரிப்பு

கிராமசேவை அலுவலராக முதல் நியமனம்பெறும்ஒருவர் இதுவரைகாலமும் வருடாந்த சம்பளமாக 17,040 பெற்று வந்தார். ஆனல் பெப்ரவரி 1ம் திகதி முதல் வருடாந்தசம்பளமாக19,680ரூபா அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கான சுற்றுநிருபம் கொழும்பு உள் நாட்டு அமைச்சில் தயாரிக்கப்பட்டு சகல கச்சேரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (85)

## இளைஞர் ஒன்றியம்

(பருத்தித்துறை)

முல்லைத்தீவில் புனித டொன்பொஸ்கோ இளைஞர் ஒன்றியத்தை முல்லைத்தீவு பங்குத்தத்தை அருட்திரு ஸ்ரலின் அடிகளார் அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளார்.

இவ் அங்குரார்ப்பண விழாவிலே உதவிப் பங்குத்தந்தை அருட்திரு தவராஜசிங்கம் அடிகளார், அருட்செல்வி சிசிலியா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(பருத்தித்துறை)

முல்லைத்தீவுப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துவருவதனுல் இப்பகுதி மக்கள் பலத்த சிரமங்களையும், பாதிப்புகளையும் அனுபவித்து வருகின்றர்.

எனவே கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (52)

## சம்பள அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினுல் அறிவிக்கப்பட்ட இருநூறு ரூபா சம்பள அதிகரிப்பு யாழ் மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்குக் வழங்கப்பட்டுள்ளது. இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து இச் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. (54)

# இலங்கை, மக்கள் வங்கி கிளைகளில் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் சாவகச்சேரி, மானிப்பாய் கிளைகளில் கொடுப்பனவுகள் இல்லாத காரணத்தால் இக்கிளைகளுக்குரிய ஆயிரம்ரூபா நிவாரணக் கொடுப்பனவும், நாலாயிரம் ரூபா உற்பத்தித்திறன்கொடுப்பனவும் கீழ்வரும்கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு இன்று 7ம் திகதி சனிக்கிழமை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் வழங்கப்படவுள்ளன.

### கிராமசேவகர் பிரிவு

பொலிகண்டி கிழக்கு, கெருடாவில்தெற்கு, உசன், மீசாலை தெற்கு, சரசாலை, இடைக்குறிச்சி, உசன், தாவளை, இயற்றுளை, நுணுவில் மேற்கு, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி நகரம், நாவற்குழி, மறவன்புலோ, கோயில்லாக்கண்டி, கச்சாய், மட்டுவில் தெற்கு, அல்லாரை, வரணி வடக்கு, கரம்பை குறிச்சி, மட்டுவில் வடக்கு, வரணி வடக்கு. மட்டுவில் வடக்கு, கைதடி கிழக்கு, கைதடிமத்தி, ஆனைக்கோட்டை, இமயாணன், கட்டுவன், வீமன்காமம்.

### ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கி கிளையில்

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் இன்று சனிக்கிழமை மீளக்குடியமர்த்தல் 2ம் கட்ட நிவாரணம் ரூபா 1000 கொக்குவில் மேற்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 1209 குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

நாளை 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கீழ் வரும் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு உற்பத்தி முயற்சிக்கான நன்கொடைப் பணம் நாலாயிரம் ரூபா வழங்கப்படும்.

வண். வடமேற்கு, வண் வடகிழக்கு. கந்தர்மடம், திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு. கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி.

### ஸ்ரான்லி வீதி மக்கள்வங்கி கிளையில்

உடுவில் உதவிஅரசாங்கஅதிபர் பிரிவைசேர்ந்தகீழ்க்கண்ட பகுதி விண்ணப்பதாரர்களின் இரண்டாம் கட்ட மீளசகுடியமர்வு கொடுப்பனவு ரூபா 1000/- யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் இன்று 7ம் திகதியும், 8ம், 9ம் திகதிகளிலும் வழங்கப்படும்.

### கிராமசேவையாளர் பகுதி

ஏழாலை தெற்கு பகுதிக்கு இன்றும், ஏழாலை மேற்குக்கு 8ம் திகதியும், புன்னலைக்கட்டுவனுக்கு 9ம் திகதியும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

### நாளை

நாளை 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் ஆயிரம் ரூபா, நாலாயிரம் ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ள கிராமசேவையாளர் பிரிவுகள் வருமாறு:-

மந்திகை, சுண்டிக்குளம், நாவற்காடு, விடத்தற்பளை, தவசிக்குளம், கொடிகாமம், வரணி இயற்றுளை, கற்கோவளம், கச்சாய், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி வடக்கு, நாவற்குழி. கைதடி நுணுவில், சாவகச்சேரி நகரம், தனங்கிளப்பு, நுணுவில் மேற்கு, மட்டுவில் தெற்கு, உயரபுலம், கரவெட்டி வடக்கு. மறவன் புலோ,

### நாளை மறுதினம்

9-ம் திகதி திங்கட்கிழமை: பருத்தித்துறை கிழக்கு, குடத்தனை கரையூர், அல்வாய் வடக்கு, அளவெட்டி கிழக்கு, மல்லாகம், மாசியப்பிட்டி, சங்கானை வடக்கு. சில்லாலை, அல்வாய் தெற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

### ஸ்ரான்லி வீதி கிளையில்

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை கீழ்வரும் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரண முழுத் தொகையான ரூபா 2000வழங்கப்படும்.

கொழும்புத்துறை, அத்தியடி, சுண்டிக்குழி, குருநகர் மேற்கு, குருநகர்கிழக்கு, யாழ், பட்டினம், பெரியகடை, கொட்டடி, நாவாந்துறை, சோனகதெரு, அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, அரியாலை மத்தி, வண். வடகிழக்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மத்தி.

### 2-ம் கட்ட நிவாரணம்

மீளக் குடியமர்தல் 2ம்கட்ட நிவாரணம் ரூபா ஆயிரம் கீழ் வரும் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வங்கியில் பெயர் குறிப்பிடப்பட்டும் எடுக்கத் தவறியவர்களுக்கு இக்கொடுப்பனவு இறுதி நாளாக நாளை மறுதினம் வழங்கப்படவுள்ளதாக வங்கி முகாமையாளர் திரு. செல்லப்பா சம்பந்தநாதன் அறிவித்துள்ளார்.

அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு, அரியாலை மத்தி, வண். வடமேற்கு, வண். வடகிழக்கு, கந்தர்மடம், நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மத்தி.


'ஈழநாடு'

வார மலர்

08 - 04 - 1990

- யாழ்ப்பாண தமிழரின் யுத்த விமானம்
- யாககுண்டம் (தொடர் நவீனம்)
- நான் பாதை தேடுகிறேன் (சிறுகதை)
- உப்பும் தப்பும் (கவிதை)
- மாணவர் மன்றம்
- ஞாயிறு மஞ்சரி
- மங்கையர் மஞ்சரி
- வாரபலன்
- மருத்துவம்
- தமிழ் இலக்கியசுவை

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

பக்கங்கள் - 12

விலை ரூபா 3/-


## மஹா சங்காபிஷேகம்

(அச்சுவேலி)

நாலம்பதி காட்டுமலைக்கந்த சாமி கோயில் மஹா சங்காபிஷேகம் இம்மாதம் 14ம் திகதி நடைபெறும்.

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு நடைபெறும் மஹா சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட உற்சவம் நடைபெறும்.

### அகில இலங்கை பாடசாலை உதைபந்தாட்டம்

# 234 பாடசாலைகளிடையே போட்டி

## யாழ். மாவட்டத்தில் 7 பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலை உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 17ம் திகதி இலங்கையின் சகல மாவட்டங்களிலும் ஆரம்பமாகின்றது.

இம்முறை இப்போட்டியில் யாழ். மாவட்டத்திலுமிருந்து ஏழுபாடசாலைகள் பங்குகொள்கின்றன.

''மைலோ'' ஸ்தாபனத்தின் ஆதரவில், அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினல் நடத்தப்படும் இப்போட்டி 12, 14, 16, 18 வயதுக்குட்பட்ட மாணவர்களிடையே தனித்தனியாக நடத்தப்படவுள்ளது.

இலங்கை முழுவதிலுமிருந்து இந்தப்போட்டியில் மொத்தம் 234 பாடசாலைக் கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன.

''நொக்சுவுட்'' முறையில் நடாத்தப்படும் போட்டியில் கால் அரை இறுதியாட்டங்கள் அனைத்தும் கொழும்பில் நடைபெறவுள்ளன. இப்போட்டியின் சாம்பியன்மோதல் யூன் மாதம் 10ம் திகதி கொழும்பு 'சுகததாச' விளையாட்டரங்கில் நடைபெறும்.

### யாழ். பாடசாலைகள் விபரம்

யாழ். மாவட்டத்திலிருந்து சென். ஜோன்ஸ் கல்லூரி, குருநகர் சென். ஜேம்ஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மத்திய மகாவித்தியாலயம் ஆகியன பங்குபற்றுகின்றன.

யாழ். மாவட்டத்திலிருந்து மேலும் பல கல்லூரிகள் இப்போட்டியில் பங்குபற்ற விண்ணப்பித்திருந்த போதிலும் இக்கல்லூரிகளின் விண்ணப்பங்கள் உரிய நேரத்தில் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் காரியாலயத்தைச் சென்றடையாததினல் இப்போட்டியில் இக்கல்லூரிகள் பங்குபற்ற முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து தற்போது இப்போட்டியில் டங்குபற்றியுள்ள ஏழு பாடசாலைகளுக்கிடையிலானபோட்டிகளை யாழ்ப்பாண பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தினரே நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் நடைபெறும் போட்டிகள் அனைத்தும் அந்தந்தப் பாடசாலைகள் விளையாட்டு மைதானங்களிலேயே நடைபெறும். இறுதியாகத் தெரிவு செய்யப்படும். பாடசாலைக் கோஷ்டிகள் கொழும்பில் நடைபெறும் இறுதியாட்டங்களில் கலந்து கொள்ளும்.

### பிரிவுகளின் விபரம்

12 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில், இலங்கை முழுவதிலுமிருந்து மொத்தம் 31 பாடசாலைக்கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. இவை 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் யாழ். மாவட்டத்திலிருந்து எந்த ஒரு பாடசாலைக் கோஷ்டியும் பங்குபற்றவில்லை.

14 வயதுக் குட்பட்டவர்கள் பிரிவில், இலங்கை முழுவதிலுமிருந்து 60 பாடசாலைக் கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. இவற்றை 15பிரிவுகளாக பிரித்து போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்பிரிவில்யாழ். மாவட்டத்திலிருந்து ஐந்து பாடசாலைக்கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. அவற்றின் விபரம் வருமாறு:- இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். ஜேம்ஸ் வித்தியாலயம், உரும்பிராய் இந்துக்கல்லூரி, மெய்கண்டான் வித்தியாலயம்.

16 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில், இலங்கை முழுவதிலுமிருந்து மொத்தம் 67 பாடசாலைக்கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. இவை 18 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்பிரிவில் யாழ். மாவட்டத்திலிருந்து நாலு பாடசாலைக் கோஷ்டிகள் பங்கு பற்றுகின்றன. அவற்றின் விபரம் வருமாறு:- சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். ஜேம்ஸ் வித்தியாலயம், யாழ். இந்துக்கல்லூரி, ஒஸ்மானியாக் கல்லூரி,

18 வயதுக் குட்பட்டவர்கள் பிரிவில் இலங்கை முழுவதிலுமிருந்து மொத்தம் 70 பாடசாலைக்கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. இவை 17 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இப்பிரிவில் யாழ். மாவட்டத்திலிருந்து மூன்று பாடசாலைக் கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன. அவற்றின் விபரம் வருமாறு:- சென். ஹென்றிஸ் கல்லூரி, ஒஸ்மானியாக்கல்லூரி, சென். ஜேம்ஸ் வித்தியாலயம். (வி)

## வலி. வடக்கு விளையாட்டு போட்டிகள்

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றுவருகின்றன.

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் இடம்பெறும் இப்போட்டிகள் பின்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்திலும், யாழ். மாவட்ட மட்டத்திலும் இடம்பெறுமெனவும், இறுதியாக அகில இலங்கை ரீதியில் இடம்பெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வலி. வடக்கிலுள்ள 45 கிராமசேவையாளர் பிரிவுகளிலும் அப்பகுதிக் கிராமசேவையாளர்கள் விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடுசெய்து நடத்திவருகிறார்கள்.

மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், குண்டெறிதல், வினேத உடை, தேங்காய் துருவுதல், தையல், கயிறு இழுத்தல் போன்ற பல்வேறு போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. (86)

## வீடமைப்புக் கடன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தின் கீழ்கடன்பெற முடியாது.

இக்கடன்கள் சொந்தமான காணியில் புதிய வீடு கட்டுவதற்கு மேலதிக இடவசதி திருத்தம் செய்தல் போன்றவற்ருேடு, காணி வேண்டவும் நீண்டகால குத்தகைக் காணியில் வீடு கட்ட ஆர்வமுள்ளோர் விண்ணப்பிக்கலாம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25-ம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் யாழ், மாநகர சபையினரிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது குறிபிடத்தக்கது. (152)

# புத்தாண்டு தின போட்டிகள்

(அச்சுவேலி)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர்பிரிவு தமிழ் சிங்கள புத்தாண்டு தின நிகழ்ச்சிகள் இம்மாதம் 9-ம்திகதி தொடக்கம் 15-ம் திகதி வரை ஒரு வாரகாலத்திற்கு நடைபெறும்.

புத்தாண்டு தினவிழாவை முனனிட்டு கரபந்தாட்டம், தாச்சிப்போட்டி, கிரிக்கெட் போட்டி, இயல் இசைநாடக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

போட்டிகள் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் பரிசில்களை திருமதி ஜே. அன்ரன் அல்பிரட் வழங்குவார்.

9-ம் திகதி காலையில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் திருநெல்வேலி சிவன்விளையாட்டு மைதானத்திலும் ஆண்களுக்கான தாச்சிப் போட்டி இந்து மகளிர் மைதானத்திலும் நடைபெறும்.

10-ம் திகதி ஆண்களுக்கான கரபந்தாட்டப்போட்டிகள் திருநெல்வேலி சிவன் விளையாட்டுமைதானத்தில் நடைபெறும்.

11-ம் திகதி மென்பந்து கிரிக்கெட்போட்டிகள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

15-ம் திகதி நடைபெறும் இறுதி நாள் நிகழ்ச்சிகள் யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபத்திலும் மைதானத்திலும் நடைபெறும். (74)

ஹறன் திரையில்
நாயகன்!!!
தினசரி: காலை 10-30, 2-30, மாலை 6-30
★ கமலஹாசன்
★ சரண்யா
★ ஜெனகராஜ்
நாயகன்
(கலர்)

## சட்டவிரோத மின்பாவனை

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட வட்டுக்கோட்டை உப அலுவலகப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனையாளர்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருவதனல் மின்சாரத்தடை ஏற்பட்டு வருவதாகவும் வெளிச்சம் மங்கிய நிலையில் காணப்படுவதாகவும் நிரந்தர சட்டரீதியான பாவனையாளர்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோத மின்பாவனையாளர்களில் சிலர் தமது பிள்ளைகளின் பரீட்சைகளைக் காரணம் காட்டியும் இந்தச் சலுகைகளைப் பெற்றுவருகிருர்களாம் சிலர் பகலிலும் சட்டவிரோத மின்பாவனையைப் பெற்றுவருவதாக சொல்லப்படுகிறது. (139)

## அணித் தலைவர் பாசறை

(புலோலி)

பருத்தித்துறை மாவட்டச் சாரணர் பிரிவினுல் நடத்தப்படும் அணித் தலைவர் பாசறை இம்மாதம் 10, 11, 12ம் திகதிகளில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருப்பதாகப் பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர் திரு. கோ. செல்வநாயகம் தெரிவித்துள்ளார். (61)

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** இப்பொழுது வருமானவரி எத்தொகைக்கு மேலே கட்டவேண்டும்?

ஒரு வியாபாரி, யாழ்ப்பாணம்.

**பதில்:** 1988/89, 89/90 வருடங்களுக்குரிய வருமான வரியின் 27 000க்கு மேல் வருமானம் இருந்தால்தான் கட்டவேண்டும். 90/91ம் ஆண்டானுல் 36,000 ரூபாவுக்கு கீழ் வருமானவரி கட்டத் தேவையில்லை. 90/91 என்பது 1-4-90 தொடக்கம் 31-3-91 வரையுள்ள காலப்பகுதியாகும். (152)

### யாழ்.பல்கலைக்கழகம்

## 343 மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில்

(உடுவில்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 343 மாணவர்களுக்கு இவ்வாண்டு மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி ஆண்டில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 768 பேரில் 343 பேருக்குப் புலமைப் பரிசில் கிடைத்துள்ளது.

மகாபொல புலமைப் பரிசில் கிடைக்காத வறிய மாணவர்கள் இருபத்தைந்து பேருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நிதியத்திலிருந்து புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. (109)

### அம்பாறை மாவட்டம்:

## சைவ ஆலயங்களுக்கு ரூ .2,50 000 ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைதீவு, கண்ணகை அம்மன் ஆலயம் பாலையடி விக்னேஸ்வரர் ஆலயம், சித்தானைக்குட்டி தேவாலயம், வீரபத்திரர் ஆலயம், காரையடி பிள்ளையார் ஆலயம் ஆகிய ஐந்து ஆலயங்களின் புனருத்தாரண வேலைகளுக்கும் வடக்கு-கிழக்கு மாகாண கலாசார திணைக்களம் நிதி ஒதுக்கியுள்ளதாக வட-கிழக்கு மாகாண கலாசார திணைக்கள பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆலயத்திற்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் இரண்டரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செல்யப்பட்டுள்ளதாவும் இதன் முதற்கட்டமாக ஒவ்வொரு ஆலயத்திற்கும் 125, 00 ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மன்னசிங்கம் தெரிவித்தார்.

மிகுதித் தொகை விரைவில் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (121)

# கிளை முகாமையாளர் மீது கடும் நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வரும் கிளைகளின் முகாமையாளர்கள் மீது நடவடிக்கைமேற்கொள்வதென்று தீர்மானித்துள்ளது.

கடந்த 1989-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை கிளைகளில் மாதாந்தம் நடைபெற்ற விற்பனை பற்றியும் நஷ்டங்கள்பற்றியும், பற்றியும் ஆராய்ந்த இயக்குநர்சபை, இதற்குப் பொறுப்பான கிளை முகாமையாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வது என்று தீர்மானித்திருப்பதாக அறியப்படுகின்றது. இதனை அடுத்து சங்கத்தின் பொது முகாமையாளர் நட்டத்தில் இயங்கும் கிளைகளின் பொது முகாமையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தொடர்ந்து நட்டத்தில் இயங்கும் பட்சத்தில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பிரமாணங்களுக்கு இணங்க சேவையில் இருந்து இடைநிறுத்தவேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் கடந்த நான்கு வருடங்களாக உதவித் தபால் அதிபராக கடமையாற்றிய திரு. எஸ். புவனேஸ்வரன் இம்மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். (72)

## வட இலங்கை ரயில் பயணிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை ரயில் பயணிகள் போக்குவரத்துச் சங்கம் யாழ். புகையிரத நிலையத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

போஷகராக யாழ். பிரதான புகையிரத நிலையத் தலைவர் திரு இ. மயில்வாகனமும் தலைவராக திரு. சு. இரத்தினசிங்கமும், செயலாளராக திரு. எஸ். நாதனும், பொருளாளராக திரு. சி. யோகசிவமும் தெரிவு செய்யப்பட்டனர். (153)

## புராண படிப்பு நிறைவு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அருள்மிகு நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய கந்தபுராண படிப்பு நிறைவுவிழா நாளை 8ம் திகதி நடைபெறவுள்ளது அன்றைய தினமிரவு வள்ளி திருமணமும் நடைபெறும். அடுத்த நாளான 9ம் திகதி வழந்துகட்டுதல் இடம்பெறும் மாலை அன்னதானம் வழங்கப்படும். 10-ம திகதி செவ்வாய்க்கிழமை நிறைமணி அன்னதானமும் இடம்பெறுமென ஆலய தருமபரிபாலன சபை அறிவித்துள்ளது. (52)

# ராஜீவை தாக்கிய கடற்படைவீரர் விடுதலை; இந்திராகாங்கிரஸ் ஊர்வலம்

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மீது தாக்குதல் நடாத்திய இலங்கை கடற்படை வீரரை இலங்கை அரசு விடுதலை செய்ததைக் கண்டித்து நேற்று சென்னையில் தமிழக இந்திரா காங்கிரஸ்தொண்டர்கள் கண்டன ஊர்வலமொன்றை நடாத்தினர்.

இவ் ஊர்வலம் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகத்திற்கு சென்று ஆட்சேப மகஜரொன்றையும்கையளித்தது. தமிழக காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. தண்டாயுதபாணி தலைமையில் இம்மகஜர் கையளிக்கப்பட்டது.

இம்மகஜரில்; தண்டனை காலம் முடியும் முன் கடற்படை வீரர் விடுதலை செய்யப்பட்டது நியாயமல்ல என்றும், கண்டனத்திற்குரியதாகுமென்றும், இவ்வாறு விடுதலை செய்தது இந்தியாவையும் இந்திய மக்களையும் அவமதித்ததாகுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

## குரும்பசிட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்த உதவிகளை தாராளமாக வழங்க அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

குரும்பசிட்டியில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி குரும்பசிட்டி சன்மார்க்கசபை கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகரை ஏற்கனவே கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே உதவி வழங்கல் அதிகாரி திரு கோடன் கேபர்ட் குரும்பசிட்டிப் பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார், என்பது குறிப்பிடத்தக்கது. (133)

## புனர்

(8-ம் பக்கம் பார்க்க)

கைக் கால் தொழிற்சாலையின் கொழும்புப் பிரிவின் திட்ட முகாமையாளர் செல்வி ஜீன் சாமுவேல் ஆகியோரும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் 'உலக தரிசன'த்தின் திட்டப் பொறுப்பதிகாரி திரு. பென் குணரத்தினம் தலைமையிலான குழு இவர்களை வழியனுப்பி வைத்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் புனர்நிர்மாண வேலைகளுக்கு மேலும் உதவி அவசியமாகவுள்ளதை நான் நேரில் பார்த்து அறிந்துகொண்டேன் வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி இவற்றுக்கு மிகவும் அவசியம்'' என்றும் திரு. திரு. கோடன் கேர்பட் கருத்து வெளியிட்டார். (133)

## வர்த்தக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் சேமிப்புக்கணக்கில் முதலீடு செய்பவர்களுக்கு பெறுமதியான ஒரு புதிய நாணயம் வழங்கப்படும்.

1000 ரூபாவுக்கு மேல் நிலையான வைப்பில் ஒரு வருடத்துக்கு முதலீடு செய்பவருக்கு வழமையான வட்டியைவிட கூடிய வட்டி தரப்படும்.

ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் நிலையான வைப்புக்களில் ஒரு வருடத்துக்கு முதலீடு செய்பவருக்கு வழமையானவட்டியைவிட அதிக விசேட வட்டிதரப்படும்.

மேலும் வெகு விரைவில் வங்கி கம்பியூட்டர் மயப்படுத்தப்படும். பிரச்சனை காலங்களிலும் ஒரே இடத்தில் இந்த வங்கி இயங்கியது குறிப்பிடத்தக்கது என்றூர். (153)

## கருத்தரங்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுறவுச் சங்கங்களோடும், பிற்பகல் இரண்டு மணிக்கு வலிகாமம் வர்த்தக சங்கங்களுடனும் சந்திப்பு இடம்பெறவுள்ளன.

இன்றுமாலை ஏழு மணிக்கு மூளாயில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் மாபெரும் கூட்டம் நடைபெறவுள்ளது. (152)

## ஓய்வூதிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை திறந்திருக்கும்.

ஓய்வூதிய வவுச்சர்களை வங்கிக்கிளையில் வரவுவைப்பதற்கு ஏற்றுக்கொள்ள வசதியாகவே மேறபடி கிளை இன்று திறந்திருக்கும் என வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

புத்தாண்டை முன்னிட்டு இந்த வசதி ஓய்வூதியக்காரர்களுக்கு இன்று செய்துகொடுக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## காங்கேசன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துச் சிறுவனும், 50 வயதுமதிக்கத்தக்க ஒருவரும் ஸ்தலத்தில் பலியானுர்கள். பலியான சிறுவனின் சகோதரனுன கார்த்திகேசு சுரேஷ்குமார் (வயது 12) என்றசிறுவன் படுகாயமடைந்தான்.

இச்சம்பவம் பற்றி காயமடைந்த சிறுவன் தெரிவிக்கையில், தானும் பலியான தம்பியும் பார்த்துக்கொண்டு நின்றபோது பலியானநபர் ஷெல் ஒன்றை எடுத்து சாக்கினுள் போட்டதாகவும் போட்டபோதே அச்ஷெல் வெடித்து மேற்படி விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

சடலங்கள் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

படுகாயமடைந்த சிறுவன் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார் (56)

# தனியார் கல்வி நிலையங்களுக்கு ஒன்றியம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரம் 92-ம் ஆண்டு பிரிவு, பற்றியும், தனியார் கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தும் சுவரொட்டிகள் தொடர்பாகவும் தனியார் கல்வி நிறுவன ஒன்றியதின் நிர்வாக சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றினை நிறைவேற்றுமாறு சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களுக்கும் பிரத்தியேக வகுப்புகளுக்குரிய ஆசிரியர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

பரீட்சைப் பெறுபேறுகளுக்கு முன்னதாக வகுப்புகளை ஆரம்பிப்பதால் தன்னுடைய கற்கை நெறிபற்றி திட்டமான முடிவு எடுக்காத நிலையிலேயே மாணவர்கள் வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனுல் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானபின்னர்கற்கை நெறியை மாற்ற வேண்டிய நிலையும் மாணவர்களுக்கு ஏற்படுகின்றது. சில மாணவர்கள் உயர்தர வகுப்புகளில் கலந்து கொண்டபின்னர் பெறுபேறுகள் திருப்தியற்றதால் சாதாரண தர வகுப்புக்கே திரும்பும் நிலையும் ஏற்படுகின்றது.

சாதாரணதரப் பரீட்சை முடிவுற்றவுடனேயே உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்படுவதால் அம்மாணவர்களுக்கு ஓய்வு இல்லாத நிலையும் ஏற்படுகின்றது,

அத்துடன் க. பொ. த. உயர்தர 90, 91ம்ஆண்டுபிரிவு மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் முற்ருக பூர்த்தி செய்யப்படாத நிலையில் அம்மாணவர்களின் கற்பித்தலுக்குரிய நேரத்திலேயே இனி வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனுல் 90, 91பிரிவு உயர்தர வகுப்பு மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இவற்றைக் கருத்திற்கொண்டு க. பொ. த. உயர்தர 92ஆம் ஆண்டிற்கான பிரிவினை பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த பின்னரேயே ஆரம்பிக்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

மேற்படி நிர்வாக சபைக் கூட்டம் நேற்று திரு. பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது.

## மற்ருெரு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ கோத்தாவில் நடைபெற்ற பொதுமக்களுடனுன சந்திப்பில் உரையாற்றுகையில் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

அண்மைக்காலமாக பலர் எம்மை பலவித கேள்விகளைக் கேட்கிறூர்கள். அது எம்மை நேசித்ததால்அல்ல. அவர்கள் இரத்தஆற்றில் மீண்டும் நீந்த விரும்பியே இவ்வாறூன கேள்விகளைக் கேட்கிறூர்கள். தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அவர்கள் ஒருவகையில் அரசியலை கண்டிக்கிறூர்கள். சமாதானம் ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை.

''இலங்கையில் மீண்டும் இரத்தக்களரி ஏற்பட்டு அமைதியும் சமாதானமும் குழம்புவதை விரும்பும் குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் வாதிகள், எமது பல நடவடிக்கைகளை கண்டிக்கிறூர்கள். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் இவ்வாறு செயற்படுவது வேதனைக்குரியது'' என்றூர். (சி)

## வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் மகளிர்படை முகாம்களுக்குச் சென்று பார்வையிட்டார்.

வடமராட்சிக்கு இது திடீர் விஜயமாக இருந்த போதிலும் தலைவர்களுக்கு பெருந்திரளான மக்கள் செல்லும் இடமெங்கும் கூடி வரவேற்பளித்தனர். இவ்விஜயத்தை முடித்துக்கொண்டு அனைவரும் யாழ்ப்பாணம் திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (51)

## மூடப்படும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. இது நீடிக்குமாளுல் வடமராட்சி மக்களின் உயிர் உடலைக் காக்கும் இலங்கையின் பாரிய வைத்தியசாலைகளில் ஒன்றூன மேற்படி வைத்தியசாலையை மூட வேண்டி நேரிடலாம் என்று டாக்டர் ஜாக்குலின் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

'கடந்த நான்கு வருடங்களாக மேற்படி வைத்தியசாலையில் பிரான்ஸ் அரசாங்கத்தின் பணிப்பின் பேரில் நான் கடமையாற்றி வருகின்றேன். நல்ல முறையில் இயங்கிவந்த இவ்வைத்தியசாலையில் கடந்த ஒருவருடமாக வைத்தியர்கள், தாதிமார், சிற்றூழியர்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக சுகாதார அமைச்சுக்கு முறையிட்டும் பலன் ஏதுவும் கிடைக்கவில்லை. இங்கு அநேக நோயாளர்கள் அரை குறைநோயுடன் வெளியேறி வருகின்றனர். மருந்துத் தட்டுப்பாடுதான் இதற்கு காரணம்.

வடமராட்சி மக்களைக் காப்பாற்றுவதற்கு பத்திரிகைகளின் பங்கு மிகவும் முக்கியமானது'' என்று செல்வி ஜாக்குலின் தெரிவித்தார். (51)

# பத்திரகாளி அம்மன் இன்று உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மேற்கு நொத்தாரிஸ் வீதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்றும் நாளையும் நடைபெறும்.

## கரவெட்டி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் கட்ட மீளக் குடியமர்த்தல கொடுப்பனவு 1000 ரூபா இன்றும் நாளையும் வழங்கப்படுகின்றன.

இன்று சனிக்கிழமை கிராம சேவகர் பிரிவு: கரவெட்டிகிழக்கு ஜே-190, அல்வாய் தெற்கு ஜே 195, துன்னுலை தெற்கு ஜே-191,

நாளை ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி மேற்கு ஜே-188, கரவெட்டி வடக்கு ஜே-194, துன்னுலை மேற்கு ஜே-193, கறணவாய் ஜே-186.

## மக்கள் வங்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றையதினம் மேற்படி கிளைகள் காலை ஒன்பது மணி முதல் நண்பகல் 12 மணிவரை திறந்திருக்கும்.

வங்கியில் அன்றையதினம் வைப்புச்செய்யும் வாடிக்கையாளர்களுக்கும், புதிய வாடிக்கையாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட கிளைகளைச் சேர்ந்த முகாமையாளர்களினுல் கைவிஷேம் வழங்கப்படும்.


தனியார் கல்விநிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## விசேட அறிவித்தல்

### க. பொ. த. உயர்தரம் 92 பிரிவு

நடைபெற்று முடிந்த க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான க. பொ. த. உயர்தர வகுப்புகளை எக்காரணங் கொண்டும் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் முன்னர் ஆரம்பிக்க வேண்டாமென சகல தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களையும் பிரத்தியேக வகுப்புக்குரிய ஆசிரியர்களையும் வேண்டிக் கொள்கின்றோம்.

தனியார் கல்விநிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்.

(சி-3724)


## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
30 - 10 - 1923

உதிர்வு:
09 - 03 - 1990



### திருமதி தில்லைநாயகி பாலசுப்பிரமணியம்

அன்பின் இருப்பிடமாய், பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் ஒளிவிளக்காய், கருணையின் உறைவிடமாய்த் திகழ்ந்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
அன்பு மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அதிகார் வளவு,
ஆனைக்கோட்டை,

(சி2725)

## மரண அறிவித்தல்

### கந்தர் வேலுப்பிள்ளை

அன்னரது இறுதிக் கிரியைகள் தவிர்க்க முடியாத காரணங்களினுல் முன்னர் அறிவித்தபடி சனிக்கிழமை (7-4-90) நடைபெறமாட்டாது.

இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 8-4-90 மாலை 4 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
க. மாயா திரவியம்
மருமகன்

569, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்;

[சி-3722]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.